அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)

கோயம்புத்தூர் -18

B. A. தமிழ் - <u>முதலாமாண்டு</u>

இலக்கணம் - <u>நன்னூல்</u>

முதற்பருவம் - 18 BTA 13C

அலகு - 5

## உருபு புணரியல்

பெயர் - முனைவர் ந. சண்முக வடிவு

துறை - தமிழ்த் துறை

அலைபேசி எண் - 9042082864

# உருபு புணரியல்

(1) வேற்றுமை உருபுகளும் அவை சார்தற்கு உரிய இடங்களும்:

ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பலவான
ஒருபெயர் ஐந்தொடு பெயர்முதல் இருநான்கு
உருபும் உறழ்தர நாற்பதாம் உருபே.

(1) ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல என்பன இருதிணைக்கும் உரிய ஐம்பால் பெயர்களாகும்.

(2) இவற்றுடன் எழுவாய் வேற்றுமை முதலாக விளி ஈறாக நின்ற எட்டு உருபுகளையும் உறழ வேற்றுமை உருபுகள் நாற்பதாம்.

எடுத்துக்காட்டு:

(1) நம்பி - எழுவாய்

(2) நம்பியை, நம்பியால், நம்பிக்கு, நம்பியின், நம்பியது, நம்பிகண், நம்பீ - விளி

(3) வேற்றுமை உருபுகள் நிற்கும் இடம்

பெயர்வழித் தம்பொருள் தரவரும்
- உருபே.

வேற்றுமை உருபுகள் தம்பொருளை கொடுக்க பெயருக்கு பின்னர் வரும்

எடுத்துக்காட்டு:-

① நம்பி + பெற்றான் - நம்பி பெற்றான் [எழுவாய்]

② நம்பி + ஐ + பெற்றான் - நம்பியைப் பெற்ற [2-ம் வேற்றுமை]

③ நம்பி + ஆல் + பெற்றான் - நம்பியால் பெற்ற [3-ம் வேற்றுமை]

வேற்றுமை உருபுகள் மொழிகளுடன் புணர்தல்

ஏற்றுவரும் முதலாற்று உருபுகள் - புணர்ச்சியின்

ஆக்கமான் அமையும் வேற்றுமைப் - புணர்ப்பெ.

① வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டு நின்று நிலைமொழியோடும் வரு மொழியோடும் புணரும்.

② அவ்வாறு புணரும் மெய்யையும், உயிரையும் முதலும் ஈறுமாக உடை ஐ முதலிய ஆறு வேற்றுமை உருபுகள் இடைச்சொல்லாகும்

③ ஆனவும் அவை இயல்பாகவும் விகாரமாகவும் புணரும் புணர்ச்சியில் மெய்யையும் உயிரையும் இறுதியாக கொண்ட பெயர்களின் புணர்ச்சி விதிகளைப் பெரும்பான்மை ஒத்து நிற்

எடுத்துக்காட்டு:

நீலம் + வானம் - நீலவானம்
வானம் என்பதன் நீல நிற மற்றும்
உடன் இவ்விரு வேற்றுமை உருபு
தன் பண்பு "ஆகிய என்ற
மை" என்னும் பண்பு உருபு
வெளிப்பட்டது.

உம்மைத் தொகை

பெயர் சொல்லும் பெயர் உம்
பெயரும் இரண்டு பலவும் உம்மை
தொகையும் உம்மையும் இடையில் உம்

ஒரு பதத்தின் இடையே பதமே
உம்மை புணரும்
அல்லது இரு உம்மை இருவரும்
மறைவதும் என்பர்
இரண்டு சொற்களும் அவை தொகை
இணைந்து வருவதும் உண்டு.

எடுத்துக்காட்டுகள்:-

(1) வெற்றிலைப்பாக்கு
நடந்தான் - நட + ந் + த் + ஆன் + உம் -
உம் உம்மை வந்தது

(2) பகற்புணர்ச்சி
பகலிரவு - பகல் + இரவு - உம்மை வ

③ உருபு புணர்ச்சி

மரத்தை - மரம் + அத்து + ஐ - அத்துச் சாரியை வந்தது

④ பல சாரியை பெறுதல்

மரத்தினுக்கு - மரம் + அத்து + இன் + உ + கு (அத்து, இன், உ)

சாரியைகள்:-

அன் ஆன் இன் அல் அற்று இற்று அத்து - அம்
தம் நம் நும் ஏ அ உ ஐ கு ன
இன்ன பிறவும் பொதுச்சாரி யையே.

① அன் முதலாக ன ஈறாகவும் எண்ணு
பிறவும் விகுதி, பதம், உருபு என்னு
மூன்று புணர்ச்சிக்கண்ணும் வருகின்ற
தனிமொழிக்கண்ணும் வருகின்ற
பொதுச் சாரியை ஆகும்.

எடுத்துக்காட்டு:

ஒன்றன் கூட்டம் - அன்

வண்டின்கால் - இன்

பலவற்றை - அற்று

மரத்தை - அத்து

எல்லார் தம்மையும் - தம்

எல்லீர் நும்மையும் - நும்

நடந்தது - அ

காற்றை - ஐ

உங்களை - ஐ

ஆன் - ன்

ஒருபாற்கு - அன்

நேர்மையல் - அல்

பறம்மையர்ந்து - உற்று

மன்றம் - அம்

எல்லார் நம்மையும் - நம்

கலேன நானி - ஏ

சாத்தவைக்க - உ

இன்னாமற என்றகணாய் !

அவர்களை - கள்

அவர்கான் - கான்

அவர்காம் - காம்

புற்றான்றோரு - ஆம்

தெல்லாமியாகள் - ஆ

எண்மையும் சரியகளாகும்

எல்லாம் என்பது இழிதிணை ஆயின்
அற்றொடு உருபின் மேலும் உம்மே
அன்றேல் நம்மிடை அடைந்தற்றாகும்

① எல்லாம் என்னும் இருதிணைப் பொதுப்பெயர் அஃறிணையைக் குறிக்கும் சொல்லாக நின்று உருபுகளுடன் புணரும்போது அற்று சாரியை பெறுவதோடு ஈற்றில் முற்றும்மையையும் பெறும்

② உயர்திணையைக் குறிக்கும் போது நம்முச் சாரியையும் முற்றும்மையையும் பெறும்.

எல்லாம் + அற்று + ஐ + உம் -
எல்லாவற்றையும் (அஃறிணை)

எல்லாம் + நம் + ஐ + உம் - எல்லா நம்மையும் [உயர்திணை].

## எல்லாரும் எல்லீரும் சொற்களின் புணர்ச்சி:-

எல்லாரும் எல்லீரும் என்பவற்று உம்மை
தள்ளி நிரலே தம்நும் சாரிப்
புல்லும் உருபின் பின்னர் உம்மே.

(1) எல்லாரும் என்னும் உயர்திணைப் படர்க்கைப் பெயரும் எல்லீரும் என்னும் முன்னிலைப் பொதுப் பெயரும் ஆறு உருபும் புணரும்

(2) அவ்விடத்து இருபெயர்களின் முற்றும்மைகள் நீங்கும்.

(3) படர்க்கைப் பெயர்க்குத் தம்முச் சாரியையும் முன்னிலைப் பெயர்க்கு நும்முச் சாரியையும் பொருந்தும்

(4) அந்நிலையில் நீக்கப்பட்ட முற்றும்மைகள் பின்னரும் பொருந்தும் உருபுகளின்

### எடுத்துக்காட்டு :-

எல்லாரும் + தம் - எல்லார் (உம்) + தம் + ஐ + அம்
- எல்லார் தம்மையும்

எல்லீரும் + நும் - எல்லீர் (உம் + நும் + ஐ + உம்
- எல்லீர் நும்மையும்.

எல்லாரும் + ஐ + உம் எல்லாரையும் (தம் சாரியை இல்லை)

எல்லீரும் + ஐ + உம் எல்லீரையும் நும் சாரியை இல்லை.

தான்தாம் நாம்முதல் குறுகும் யான்ய
நீநீர் என்எம் நின்நும் ஆம்[2] பிற
குவ்வின் அவ்வரும் நான்கு[3] ஆறு[4] இரட்டல

(1) தான், தாம், நாம் என்பவற்றோடு உருபுவரின் தன், தம், நம் எனக் குறுகும்

(2) யான், யாம், நீ, நீர் என்பவை குறுகையோடு என், எம், நின், நும் எனத் திரிந்து உருபொடு புணரும்

(3) இவ் வரு சொற்களும் கு என்னும் நான்காம் வேற்றுமை உருபுடன் புணரும் போது இடையில் அகரச் சாரியை வரும்.

(4) அகரச் சாரியை பெறும் இவ்வுருபு ஆறாம் வேற்றுமையும் இச்சொற்கு முன்வரின் ஒற்று இரட்டுவதில்லை.

எடுத்துக்காட்டு:-

(1) தான் + ஐ - தன் + ஐ - தன்னை;

(2) யான் + ஐ - என்னை;

(3) தாம் + கு - தம் + கு - தம் + அ + கு - தமக்கு

(4) நாம் + அது - நம் + அது - நம + து - நமது.

பசுவை உணர்த்தும் ஆ என்னும் பெயரும் விலங்கை உணர்த்தும் மா என்னும் பொதுப்பெயரும் இறைவனை உணர்த்தும் கோ என்னும் பெயரும் உருபுகளோடு புணரும்பொழுது னகரச் சாரியை பொருந்தவும் பெறும்.

எ.கா = ஆ + ஐ = ஆ + ன் + ஐ = ஆனை

மா + ஐ = மா + ன் + ஐ = மானை

கோ + ஐ = கோ + ன் + ஐ = கோனை

ஆ + ஐ = ஆவை

மா + ஐ = மாவை

கோ + ஐ = கோவை

இவ்வாறு பிற உயர்களுக்கும் எடுத்துக்காட்டுகளை அமைத்துக் கொள்வது அவசியம். அனையவும் என்ற உம்மை சாரியை வாராமலும் புணரும்.

## எண்ணுப் பெயருடன் உருபுகள் புணர்தல்

241. "ஒன்று முதலெட் டீறாம் எண்ணூர்
பத்தின்முன் ஆன்வரின் பவ்வொற் றழியமேல்
எல்லாம் ஓடும் ஒன்பதும் இற்றே"

ஒன்று முதல் எட்டு ஈறாகிய எண்களோடு புணர்ந்த பத்து என்னும் எண் முன்னர் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வந்து புணரும். அவ்விடத்துப் பத்து என்னும் எண்ணினது பகர ஒற்று மட்டுமே நிற்க மேல் நின்ற எல்லா எழுத்தும் கெடும். ஒன்பது என்னும் எண் முன்னரும் உருபுகள் புணருமிடத்து ஆன் சாரியை வரின் அதன் பகரவொற்று நிற்க மேல்நின்ற எல்லா எழுத்தும் கெடும்.

(எ.கா) ஒன்று + பத்து + ஐ - ஒரு + பத்து + ஆன் + ஐ

ஒரு + ப் + ஆன் + ஐ - ஒருபானை

ஒன்பது + ஐ - ஒன்ப் + ஆன் + ஐ - ஒன்பானை

ஒன்பஃது + ஐ - ஒன்ப் + ஆன் + ஐ - ஒன்பானை

பது, பஃது என்பவற்றில் முறையே அது, அஃது என்பன கெட்டன.

வகர ஈற்றுக்குச் சிறப்பு விதி

250. அவ்விறு சுட்டிற்கு அற்று உறல் வழியே.

அஃறிணைப் பன்மைப்பால் உணர்த்தும் வகர ஈற்றுச் சுட்டுப் பெயர்கள் மூன்றும் உருபுகளோடு புணருவத்து அற்றுச் சாரியை பெறும்.

(எ.கா):-

அவ் + ஐ - அவ் + அற்று + ஐ - அவற்றை
இவ் + ஐ - இவ் + அற்று + ஐ - இவற்றை
உவ் + ஐ - உவ் + அற்று + ஐ - உவற்றை

வழி என்னும் மிகையால் அற்றும் இன்னும் ஒருங்கே வருதலும் அமையும்.

அவ் + அற்று + இன் + ஐ = அவற்றினை, இவற்றினை, உவற்றினை

இச்சாரியை புணர்ச்சியால் அவ் + அற்று என்பதில் தனிக்குறில் முன் ஒற்று இரட்டா

சுட்டுப் பெயர்முன் ஆய்தம் கெடுதல்

௨௫. சுட்டின்முன் ஆய்தம் அன்வரின் கெடுமே.

அஃது, இஃது, உஃது என்னும் சுட்டுப் பெயர்களின் முன் அன் சாரியை வந்து புணர நிலைமொழியின் இடைநிற்கும் ஆய்தம் கெடும்.

(எ.டு): அஃது + அன் + ஐ - அது + அன் + ஐ - அதனை

இதேபோல் இதனை, உதனை அமையும்.

அஃது + ஐ - அஃதை ; அது + ஐ - அதை

சாரியை வர ஆய்தம் கெடும். வராவழி இயல்பாகப் புணரு

அன் வருதலை வற்புறுத்திக் கூறாமையால் நான்காம் வேற்றுமை உருபு புணர்வழி அதனுக்கு என உகரச் சாரியை வருமே.

## அத்துச் சாரியை புணர்தல்

252. அத்தின் அகரம் அகரமுனை இல்லை.

அத்துச் சாரியையின் அகர உயிர் இயல்பாலும்
விதியாலும் நின்ற அகர உயிர்ச்சொல்லின் முன் வரின் அகர
உடம்படுமெய் பெறாது கெடும்.

(எ.கா): மக + அத்து + கை = மகத்துக்கை (இயல்பீறு)
மர(ம்) + அத்து + கிளை = மரத்துக்கிளை (விதியீறு)

## சாரியைக்குப் புறனடை

253. இதற்கு இது சாரியை என்னின் அளவு இன்மையின்
விகுதியும் பதமும் உருபும் பகுத்து இடை
நின்ற எழுத்தும் பதமும் இயற்கையும்
ஒன்ற உணர்த்தல் உரவோர் நெறியே.

விகுதி முதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியை என தனித்தனியாகச் சொல்லப் புகுந்தால் அதற்கு வரையறை இல்லை. ஆதலால் விகுதி, பதம், உருபு புணர்ச்சி ஆகியவற்றைக் கண்டு அவற்றைப் பிரித்துப் பார்க்க இடைநிற்கும் ஏ, அ போன்ற எழுத்துச் சாரியையும் அன், ஆன் போன்ற பதச் சாரியையும் இவ்விருவகை சாரியை தோன்றா இயல்பினையும் பொருந்துமாறு அறிவித்தல் பெரியோரது நெறியாகும்.

(எ.கா) எழுத்துச் சாரியைகள் அ, உ, ஏ, ஐ போல்வன
பதச்சாரியைகள் அன், இன், அம் போல்வன

(எ.கா)
பார்+த்+த்+அ+து - அ
பொன்+உ+க்+கு - உ
ஒன்று+ஏ+முக்கால் - ஏ
} விகுதி, உருபு பதப்புணர்ச்சிகளில் எழுத்துச் சாரியைகள்

பார்த்+த்+அன்+அன் - அன்
அவை+அற்று+ஐ - அற்று
புளி+அம்+காய் - அம்
} விகுதி, உருபு பதப்புணர்ச் [illegible] பதச்சாரி [illegible]

வினாக்கள்

1. வேற்றுமை உருபுகள் சாரும் இடங்கள் யாவை?
2. வேற்றுமை உருபுகள் மொழிகளுடன் புணர்தல் எவ்வாறு?
3. சாரியை வரும் முறைமைகளை சான்றுகளுடன் விளக்கு
4. எல்லாம் எல்லீரும் புணருமாற்றை விவரி?
5. ஓரெழுத்து ஒரு மொழிகளின் புணர்ச்சியினை விளக்குக.